**சுருக்கம்**

கும்பகோணம் நகராட்சி – கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, கும்பகோணம் நகராட்சியுடன் தாராசுரம் பேரூராட்சியை இணைத்தல் (Inclusion) – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.119** **நாள்: 07.12.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ, கார்த்திகை–21**
**படிக்கப்பட்டது:**

(1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க.எண். 8069/2021/த1 நாள். 06.10.2021.

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 20779/ 2021/ மா.ந.அ1, நாள் 07.10.2021

(3) அரசாணை (நிலை) எண். 85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.10.2021.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 20779/ 2021/ மா.ந.அ1, நாள் 27.11.2021

******

**ஆணை :**

சட்டப்பேரவையில், 2021–22 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன், "கும்பகோணம் நகராட்சி மற்றும் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும்" என மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, முறையே, மேலே முதலாவதாகவும் மற்றும் இரண்டாவதாகவும் படிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்புகளின் அடிப்படையில், கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, கும்பகோணம் நகராட்சியுடன், தாராசுரம் பேரூராட்சியை இணைக்கலாம் என்ற அரசின் உத்தேச முடிவை அறிவித்தும், இது குறித்து நகராட்சிக்கு வரி செலுத்துவோர் மற்றும் பேரூராட்சியில் வசிப்போர் எவருக்கும் ஆட்சேபணைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை, அறிவிக்கை வெளியிடப்பட்ட ஆறு வார காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கலாம் எனவும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், அவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கை, 14.10.2021ஆம் நாளிட்ட அரசின் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. மேற்படி ஆறு வார காலத்திற்குள் அரசில் ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை.

**3.** நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, கும்பகோணம் நகராட்சியுடன் தாராசுரம் பேரூராட்சியை இணைப்பது தொடர்பாக கும்பகோணம் நகராட்சி மற்றும் தாராசுரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாகவும், மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலும், கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு வெளியிடப்பட்ட உத்தேச முடிவு குறித்த அரசாணையில் மேற்படி இணைப்பு குறித்த ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், கும்பகோணம் நகராட்சியுடன் தாராசுரம் பேரூராட்சியை இணைத்து கும்பகோணம் மாநகராட்சியாக அமைத்துருவாக்கும் பொருட்டு இறுதி அரசாணைப் பிறப்பிக்க, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட தீர்மானங்களுடன் உரிய கருத்துரு பெறப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைக்கேற்ப, கும்பகோணம் நகராட்சியுடன் தாராசுரம் பேரூராட்சியை இணைக்கலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து அரசாணை பிறப்பிக்கக் கோரியுள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை அரசிற்கு பரிந்துரை செய்து மேலனுப்பி வைப்பதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**5.** இந்நிலையில், அரசு, இச்செயற்குறிப்பின் மீதான கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று, கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, கும்பகோணம் நகராட்சியுடன், அதனருகில் அமைந்துள்ள தாராசுரம் பேரூராட்சியை இணைக்கலாம் என்ற உத்தேச முடிவை உறுதி செய்து, இதன் மூலம், கும்பகோணம் நகராட்சியுடன் தாராசுரம் பேரூராட்சியை இணைத்து (Inclusion) அவ்வாறே ஆணையிடுகிறது.

**6.** இதனடிப்படையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4-ன் (3) ஆம் உட்பிரிவின்படியான இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 07.12.2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:-**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-01 (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
மாவட்ட ஆட்சி தலைவர், தஞ்சாவூர்.
ஆணையர், கும்பகோணம் நகராட்சி. (நகராட்சி இயக்குநர் வழியாக)
செயல் அலுவலர், தாராசுரம் பேரூராட்சி. (பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம்ம ற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
சட்டத்துறை, சென்னை–09.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை–106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6, ந.நி.5, வ.செ. மற்றும் அ.ந.2) துறை,
சென்னை–09.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby includes the entire areas comprised in the local authority of Dharasuram Town Panchayat within the jurisdiction of Kumbakonam Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above inclusion, wards will be divided for the next ordinary election.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

SECTION OFFICER.